ISSN:2582-9599



# தருமபுரி மாவட்டமும் தெருக்கூத்துக் கலையும்

**சி.பரமேஸ்வரன்**
**பகுதிநேர முனைவர் பட்டஆய்வாளர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை –113.**

9

**கட்டுரை சுருக்கம்**

தமிழ் மொழியின் இலக்கியம் நீண்ட நெடிய பழமையை தன்னகத்தே கொண்டுள்ளது வளமான இலக்கணங்களை கொண்டுள்ள செவ்வியல் மொழி பல்வேறு வகைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது அவற்றில் நாட்டுப்புற இலக்கியம் ஒன்றாகும் இவ்விலக்கியத்தில் தெருக்கூத்துக்களை வாயிலாக பல்வேறு புராண இதிகாச பாரத கூத்துக்கள் மூலமாக மக்களுக்கு நற்கருத்துக்களும் சமய சடங்குகளும் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெறும் கூத்துக்கள் மக்கள் பார்வைக்காக நடத்தப்படுகிறது மழை வேண்டி அர்ஜுனன் தபசு கூத்தும் இறப்பு நிகழ்வில் கர்ணன் மோட்சம் கூத்தும் சுபத்திரை மாலையிடு கூத்து தர்மபுரி மாவட்டத்தில் இன்றளவும் திரௌபதி அம்மன் கோயில் வழிபாட்டில் பாரத கூத்துக்கள் அதிகளவு ஊரில் நடைபெறுகின்றன பாரத கூத்துக்கள் 18 , 20 நாட்கள் நடைபெறும் இவற்றைப் பற்றிய செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொல்**

சமயங்கள் வழிபாடு சைவம் வைணவம் தொல்காப்பியம் சுபத்திரை மாலையிடு கூத்து தருமபுரி மாவட்ட வரலாறு

**முன்னுரை:**

நாடகக் கலையின் தோற்றமானது தெய்வவழிபாட்டுடன் தொடர்பு கொண்டு தோன்றியுள்ளது. என்று நாடகவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். சிலப்பதிகாரக் காப்பியம் கூத்துப் பற்றி கூறும் பழமையான காப்பிய நூலாகும் அதில் தெய்வங்கள் ஆடிய ஆடல்களை கூத்துகளாக வகைப்படுத்தியுள்ளதை காணமுடிகிறது. இவ்வாறு தெய்வத்தால் தோன்றிய தெய்வத்துடன் தொடர்புடைய நாடகக்கலையானது தெய்வங்களையும் அவை உறையும் இடங்களையுமே மூலங்களாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டு வருகிறது. குறிப்பாகத் தெருக்கூத்துக் கலையானது திரௌபதியம்மன் ஆலயத்துடன் மிகவும் தெருங்கியத் தொடர்புடைய ஒரு கலையாக இருந்து வருகிறது திரௌபதியம்மன் ஆலயத் திருவிழாவில் மகாபாரதச் சொற்பொழிவு தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாக இருக்கின்றது தருமபுரி மாவட்டத்தில் பகலில் சொற்பொழியும் இரவில் தெருக்கூத்தும் நடிக்கப் பெற்று வருகிறது தருமபுரி மாவட்டத்தில் நடிக்கப் பெறும் கூத்துக் கலைகள் பற்றி ஆய்வுகளம் கொண்டதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**தருமபுரிமாவட்டம் அறிமுகம்:**

தகடூர் எனும் பெயர் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முந்திய தமிழ் இலக்கியங்களிளும் காணப்படுகிறது தற்போது தருமபுரி என்று அழைக்கப்படுகிறது. கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த ஏழு வள்ளல்களுல் தலைசிறந்தவனான அதியமான் நெடுமான் அஞ்சி வாழ்ந்த இடமாகும் இவன் தமிழ் மூதாட்டி ஔவையார் நீண்டநாள் வாழவேண்டும் எனக்கருதி அம்மூதாட்டிக்கு அரிய நெல்லிக்கனியை வழங்கிய வள்ளல் என்ற சிறப்பை பெற்றான். சிறுப்பு வாய்ந்த இடமான தருமபுரி சங்காலம் முதல் பதினேழாம் நூற்றாண்டு முடிய தகடூர் என்றே அழைக்கப்பட்டு வந்தது இந்த தடூரின் சிறப்பை சங்க இலக்கியம் அரண் கொண்டு சிறந்த வீரர்களால் காக்கப்பட்டதை

**'வெல்போர் ஆடவர்மறம் புரிந்துகாக்கும்**

**வில்பயில் இறும்பின் தகடுர்"-1 (பதிற்றுப்பத்து . ப-78)**

என்று தகடூர் புதிய ஊரல்ல தொன்மையானது என்பதை பதிற்றுப் பத்து பாடல் மூலம் அறியமுடிகிறது. தகடூரைச் சுற்றிலும் மலைகள் சூழ்ந்திருந்தன என்றும் இவைகளுக்கு இடைப்பட்டபகுதிபால் தகடூர் அமைந்திருந்தது என்றும் .அதியனின் தலைநகரம் எப்படி இருந்தது என்பதைப் பற்றி புறநானூறு பாடல் கூறுவது

**'ஊராது ஏந்திய குதிரைக் கூர் வேல்**

**கூவிளங் கண்ணிக் கொடும் பூண் எழினியும்" -2 ( தகடூர் நாடும் அதியமான்களும் ப-57)**

தகடூர் என்ற நகரம் ஊர்ந்து செல்லப்படாத குதிரை என்னும் உயர்ந்த மலையை உடையது என்றும் கூர்வேல் ஏந்தி கூவிளம் பூமாலை,வளைந்த பூணாரம் போன்ற அணிகளைத் அணிந்திருந்தான் என்று பாடல் கூறுகின்றது.

**கல்வெட்டில் தகடூர் நாடு**

தகடூர் என்ற பெயர் பல கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது. தகடூர் நாடு என்ற பெயர் உள்ள முதல் கல்வெட்டு கி.பி.4,5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இருளப்பட்டி(பாப்பம்பட்டி) நடுகல் கல்வெட்டு ஆகும். இக் கல்வெட்டு வட்டெழுத்திலும் தமிழ் மொழியிலும் உள்ளது. தகடூர் நாட்டை ஆண்ட சங்க அரசர் மீது படையெடுத்து வந்த போது அப்போரில் இறந்த வீரனுக்கு இந்த நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கி.பி.4.5 ஆம் நூற்றாண்டிக் கங்கர்கள் ஆட்சிசெய்தனர் என்பதும் அவர்கள் பல்லவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தனர் என்பதும் இதனால் அறிய முடிகிறது.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் கங்க அரசர்கள் பற்றிய குறிப்புகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இதை தொடர்ந்து வருகின்ற கல்வெட்டுகளில் தகடூர் பகுதிக்குக் கங்க நாடு என்ற பெயரும் இருந்ததாக தெரிகிறது. 'தகடூர் நாடும் கங்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் கங்கபாடி என்று அழைக்கப்பட்டது. தகடூர் நாடும் கங்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் கங்கபாடி என்றும் கங்கநாடும் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன"-3 தகடூர் நாடும் அதியமான்களும் நூலின் வழி அறியமுடிகிறது. மேலும் நுளம்பர்கள் தகடூரை ஆண்டதையும் காணமுடிகிறது. இப்பெருமை பெற்ற தருமபுரில் நடிக்கப் பெறும் கூத்துக் கலையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கூத்துக் கலை**

கால்களைக் கீழே குதித்து ஆடுவது கூத்து எனப்படும் ஆரம்பக் காலங்களில் கைகளையும் கால்களையும் அசைத்து மக்கள் மழை வேண்டி ஆடினார்கள். பிறகு ஆடலும் பாடலும் மக்களின் வாழ்க்கையோடு கலந்தன.

**'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சிஉறழத் தோன்றி"-4 (தொல்காப்பியம் புறத்திணை-ப248)**

என்ற அடியில் தொல்காப்பியம் தொகாப்பியத்தில் கூத்து எனும் இனம் இருந்தது என்றும், அவர்கள் ஆடல் கலையை வளர்த்து மக்களை மகிழ்ச்சி அடைய வைத்தார்கள் என்று உணர்கிறோம்.

**'ஊர் ரெண்டுப்பட்டா**

**கூத்தாடிக்குக் கொண்டாட்டம்"-5 (நாட்டுப்புற இயல் ஆய்வுகள் ப-252)**

என்னும் பழமொழியில் கூத்தாடி என்ற இனம் இருந்ததைஅறிய முடிகிறது. தொல்காப்பியர் வேத்தியல்,பொதுவியல் என்னும் இருவகையான கூத்துகளைக் சொல்கின்றார். வேத்தியல் என்பது அரசர் அமைச்சர் முன் ஆடப்படுவது பொதுவியல் என்பது பொதுமக்கள் காண்பதற்காக ஆடப்படுவது, தெருக்களிலும் பொதுவிடங்களிலும் இக்கூத்துகள் அனைத்து மக்களும் காண்பதற்கு நடத்தபபட்டதாக காணமுடிகிறது இது தற்போது தெருக்கூத்தாக வளர்ந்திருக்கலாம்.

**தெருக்கூத்து**

மூன்று தெருக்கள் சந்திக்கம் இடத்தில் தெருக்கூத்து நடைபெறும் தெருவில் நடக்கும் கூத்தே தெருக் கூத்தாகும், நாடகம், நாட்டியும், கூத்து ஆகிய மூன்றும் தெருக் கூத்தையே குறிப்படும்.

**'மன்றத்திற்கு மக்கள் வரமால் மன்றமே மக்கள்**

**இடத்தில் செல்கிறது" -6 (நாட்டுப்புற இயல் ஆய்வுகள் ப-440)**

என்று தெருக் கூத்தைக் கூறுவார்கள் மிகவும் எளிமையான சொற்களையும் வசனங்களையும் கொண்டு மக்களை தன் வசப்படுத்தும் பாங்கு தெருக் கூத்துக்குஉண்டு . மக்களின் மனங்களில் இருக்கும் இராமாயான மகாபாரத புரணாக் கதையினை மிகுதியான பாடல்களைக் கொண்டு கூத்தாக நடிக்கப் பெறுவது தெருக்கூத்தின் சிறப்பாகும.; தெருக் கூத்துகள் நாட்டுப்புற மக்களின் கலை வடிவங்களில் முதன்மையான கலையாக இருந்ததை அறியமுடிகிறது. கோயில் திருவிழாக்கள் அம்மன்,திரௌபதியம்மன். மற்றும் மங்கலச் சடங்குகள். இறப்புச் சடங்குகளில் தெருக் கூத்து நடத்தப்படுகிறது.

**தருமபுரி மாவட்டத்தில் நடிக்கப்பெரும் கூத்துகள்**

தருமபுரி மாவட்டத்தில் அதியமான் நெடுமான் அஞ்சி காலம் தொட்டு 16-ம் நூற்றாண்டு பல்லவர் ஆட்சி கங்கர் ஆட்சி காலத்தில் தெருக்கூத்துக் கலை பழைய தருமபுரியில் தோன்றியது. வினைத் தீர்த்தான் கவுண்டர், முனுசாமி கவுண்டர் அந்தகுடும்பத்தில் பள்ளி மாணவர் நச்சபிரபு ஒலைச் சுவடியில் இருந்த மதிகெட்டான் நாடகத்தை அதியமான் அரசுஆண்கள் மேல் நிலைபள்ளி தலைமை ஆசிரியரான முனுசாமி வாத்தியாரிடம் ஒலைகளை கொடுத்தார். அவர் 'இவ் ஓலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் தசரதன் அவர்களிடம் கொடுத்தார். 1991-ல் பதிவு எண் : 81 தருமபரி நாடக நடிகர் சங்கம் உருவாயிற்று. இதன் மூலம் 1997- ல் உருவாக்கப்பட்ட நாட்டுப்புற நலவாரித்திட்டத்தில் பதிவு செய்து இச்சங்கத்தின் சார்பாக நாடகக் கலைநர்கள் பலகுழுக்களாகச் சேர்ந்து தருமபுரியில் நாடகம் நடிக்கலாயினர். என்று பாலவாடிகந்நசாமி வாத்தியார் மூலம் அறியப்பட்ட செய்தியாகும்"-7;.

தருமபுரியில் திரௌபதி அம்மன் வழிபாட்டில் மகாபாரதம் சார்ந்த தெருக்கூத்துக்கள் நடிக்கப் பெறுகின்றன. இதில் 18நாட்கள் தொடர்ச்சியாக நாடகம் நடிக்கப் பெறுகிறது. மற்றும் இறப்பு சடங்கு நிகழ்வுகளிலும் கூத்துகள் நடிக்கப்படுகிறது. மரத்தின் மீது இடிவிழுந்தாலும் கூத்துகள் நடிக்கப் படுகிறது. இப்படிநடிக்கப் பெறும் கூத்துகளின் விபரம்.

**மகாபாரதம் சார்ந்த கூத்துகள் :**

1. அம்பா,அம்பிகை அம்பாளிகை

2. பாண்டவர்கள் பிறப்பு
3. தானாசூரன் வதை
4. கர்னன் பிறப்பு
5. வில் அரங்கேற்றம்
6. சுபத்திரைதிருமணம்
7. தீர்த்தயாத்திரை
8. அரக்குமாளிகை
9. அர்சுணன் வில் வளைப்பு
10. துரோபதை திருமணம், சூது,பகடை,துயில்
11. முதல் வனம்
12. அர்சுணன் தவநிலை
13. அரண்வரம் (அர்சுனன் தபசு)
14. குறவஞ்சி (12-வதுவனம்)
15. விராடபருவம்
16. கிருஷ்ணன் பிறப்பு
17. 13-ம் போர்
18. கிருஷ்ணன் தூது
19. 17-ம்போர்
20. ஆரவாண் சாபம்
21. சேர்க்கவாசல்
22. ஆரவாண் களபலி
23. 18-ம் போர்

**இராமாயம் சார்ந்த கூத்துகள்**

1. இராமர் பட்டஅபிஷேகம்
2. அகழிகைசாபம்
3. தாடகைசம்பாரம்
4. சூர்பநகைபங்கம்
5. அனுமன் தூது
6. வாலிமோட்சம்

இவ் வகையான கூத்துக்கள் தருமபுரி மாவட்டத்தில் நடிக்கப் பெற்றதாக பாலவாடி கந்தசாமிவாத்தியார் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் ஆகும்.

**சுபத்திரை மாலையீடு நாடகம்**

சுபத்திரை மாலையீடு நாடகத்தில் சுபத்திரை சபைக்குள் வருகின்ற விதத்தைக் கூறும் பாடல்

‘வந்தால் சுபத்திரைப் பெண் பாரீர்
வாரால் சுபத்திரைப் பெண் பாரீர்
விளையாடும் கன்னிகையாள்
விளையாடியேமாதுமதன்
மதன் ரதியைப்போல் மெள்ள
சபைக்குவாரால் -வந்தால்”-8 **( சுபத்திரைமாலையீடுநாடகம் ப29)**

மேலும் ஒருபாடலில்

‘என்னசெய்வேன்யிப்போஏதுசெய்வேன்தெய்வமே
பூதலந்தன்னிலுள்ளமாதர்கள் தன்னைப்போலே
புருஷபாக்கியமில்லையோ
விரகலாகாபருவமானல்
விரகம்பொறுத் திடலாமோ
சரசமாய் விளையாட
சற்குணனைநான்கூட’-9 **(சுபத்திரைமாலையீடுநாடகம் ப35)**

இப்பாடலில் சுபத்திரை அர்ச்சுனன ;மேல் மையலான காட்சியையும் தன் அண்ணன் பலராமன் வாக்கின் படி சுபத்திரையை துரியோதனன் விவாகம் முடிக்கவேண்டும் அதனால் துரியொதனன் மாலையிட வருகின்ற வேலையில் சுபத்திரை புலம்பும் காட்சியை காணமுடிகிறது.

**முடிவுரை**

நாட்டுப்புற கலைகளுள் ஒன்றான கூத்துக்கலை பற்றியும் தருமபுரி மாவட்ட சிறப்பும் பழமையும் இங்கு நடிக்கப் பெறும் தெருக்கூத்து நாடகங்கள் திரௌபதி அம்மன் வழிப்பாடு மூலம் கூத்துக்கள் நிகழ்த்தப்படுவதையும் தருமபுரில் தெருக் கூத்து வளர்ந்து வந்தவிதத்தை இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

**துணைநூல் பட்டியல்**

1.துரைசாமி பிள்ளை பதிற்றுப்பத்து, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் சென்னை - 1 முதல் பதிப்பு ஜனவரி 1950.

2. அறு.ராமநாதன் நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம் - சிதம்பரம்.

3.சூலை முனிசாமி - சுபத்திரை மாலையிடும் நாடகம், ரத்தின விநாயகர் அண்டு சன்ஸ், 26 வெங்கட்ராம தெரு கொண்டி தோப்பு, சென்னை - 79

4. தி.சுப்பிரமணியன் தகடூர் நாடும் அதியமான்களும், திருவள்ளுவர் புத்தக இல்லம், ஆறுமுக ஆசாரி தெரு, தர்மபுரி -636701

5. புலியூர் கேசிகன், தொல்காப்பியம் புறத்திணை இயல், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை.